நிலம் தருகிறார்கள். அதிலேயும் அரிசனங்கள், அரிசனங்கள் அல்லாதவர்களுக்கு 2 செண்ட், 3 செண்ட், 5 செண்ட் என்று, அதுகூட அல்ல, என் இலாக்காவில் என் மூலமாகத் தருவது மூன்று, ஐந்து.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : தலைவரவர்களே, மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் ஒரு முக்கியமான பிரச்னையைக் கிளப்பினார்கள். "ரூரல் ஹவுஸ்லெஸ் புவர்" என்ற திட்டத்தின்படி நகர மன்ற எல்லைக்கு அப்பாற்பட்டு, எல்லா ஜனங்களுக்கும்—ஏழைகளுக்கு, வீடில்லாதவர்களுக்கு— கொடுக்கலாம் என்ற திட்டம் இருக்கிறது. நிலத்தை மூன்று செண்ட் கொடுக்க அனுமதி கொடுக்க வேண்டுமென்று எழுதியிருக்கிறோம். ஆனால் இரண்டு செண்ட்தான் கொடுக்கலாம் என்று தெரிவித்திருக்கிறார்கள். குறிப்பாக, 10,000 ரூபாய்க்குமேல் ஒரு ஏக்கராவிற்கு அனுமதி இல்லை என்று தெரிவித்திருப்பதாக அறிகிறேன். ஆனால் அதன் முழு விவரமும் எனக்கு ஞாபகத்தில் இல்லை. ஒரு குறிப்பிட்ட தொகைக்குமேல் விலையுள்ள நிலத்தை வாங்கக்கூடாது என்று சொல்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினரவர்கள் தவறு எங்கு நிகழ்ந்திருந்தாலும் அதைக் குறிப்பிட்டுச் சொன்னால் அதைப் பரிசீலிக்கலாம். அரிசன நலம் வேறு, ரூரல் ஹவுஸ்லெஸ் புவர் வேறு. ரூரல் ஹவுஸ் சம்பந்தமாக மாண்புமிகு அமைச்சர் இராசாராம் அவர்கள் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். தமிழ்நாடு முழுவதும் கணக்கெடுத்து அனுப்பினோம். ஆனால் வந்துள்ள தொகை போதாது என்று சொல்லக்கூடிய நிலையில் இருக்கிறோம்.

விடுதி மாணவர்களுக்கு சத்துணவு வழங்குதல்.

*478 வினா. திரு. பெ. சௌந்திரபாண்டியன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

திருச்சி மாவட்ட அரசினர் மாணவ, மாணவியர் விடுதிகளில் சத்துணவு திட்டத்தின்கீழ் தொடர்ந்து முட்டை, பால் வழங்கப்பட்டு வருகிறதா ?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : திருச்சி மாவட்டம் அரசினர் இல்லங்களிலுள்ள மாணவ மாணவியருக்கு சத்துணவு திட்டத்தின்கீழ் முட்டையும் பாலும் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன. சில இடங்களில் குறிப்பிட்ட காலங்களில் முட்டை எளிதாகக் கிடைப்பதில்லை. இதை ஈடு செய்ய முட்டைக்குப் பதில் பால் அதிகமாக வழங்கப்படுகிறது.

திரு. ஏ. ஆர். மாரிமுத்து : தலைவரவர்களே, ஹாஸ்டல்களில் இருக்கும் மாணவர்களுக்காக நாம் ஒதுக்கும் தொகை இன்றைக்குள்ள விலைவாசி நிலவரத்தில் நல்ல உணவு கொடுப்பதற்குப் போதியதாக இல்லை. அதை ஈடுகட்ட அதிகத் தொகையை ஒதுக்குவதற்கு அரசு முயற்சிக்குமா ? அதுவல்லாமல், சாத்தியமான இடங்களிலே ஹாஸ்டல் ஸ்டூடென்ட்கள் காய்கறித் தோட்டம் போன்றவைகளை வைத்துக் கொள்வதற்கு வசதியையாவது செய்து கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : தலைவரவர்களே, இவ்வளவு காலமாக 25 ரூபாயாக மாதம் ஒன்றுக்கு என்று இருந்தது. 1—8—1973 முதல் 28 ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. உயர்ந்தநிலைப் பள்ளி

1974 மார்ச் 18]

இல்லங்களுக்கு பள்ளியிலும், விடுதியிலும் அவர்கள் அந்த இடங்களிலும், சுற்று வட்டாரத்திலும் காய்கறி பயிரிடும் திட்டத்தை இன்றைக்கும் கடைப் பிடித்து வருகிறார்கள். ஆனால் சில இடங்களில் அவர்கள் செய்யவில்லை. ஆனால் நலத்துறை மூலமாக ஆசிரியர்கள், இல்லக் காப்பாளர்கள் காய் கறித்தோட்டம் வைப்பதற்கான திட்டத்தை வற்புறுத்தப்படுகின்ற முறையில் செய்கிறார்கள். ஆனால் கேள்வி அதுவல்ல. திருச்சி மாவட்டத்தில் முட்டை, பால் கொடுக்கப்படுகிறதா என்பதைப்பற்றி. இல்லை என்று அவர்கள் சொல்கிறார்கள். கொடுக்கப்படுகிறது என்று நான் சொல் கிறேன். மாண்புமிகு அங்கத்தினர் அவர்கள் எதையெதையோ போட்டு குழப்பிக்கொண்டிருக்க வேண்டாம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம்: தலைவரவர்களே, திருச்சி ஜில்லா வில் எத்தனை ஹாஸ்டல்களில் இந்த பால், முட்டைகள் வாரத்தில் எத்தனை நாட்கள் கொடுக்கப்படுகிறது ஒழுங்கான முறையில்?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து: தலைவரவர்களே, எல்லா ஹாஸ்டல்களிலும் வாரத்திற்கு ஐந்து நாட்கள் கொடுக்கப்படுகிறது. சில யிடங்களில் முட்டை கிடைக்கவில்லை என்று சொல்லப்படும் இடத்தில்— பால் கொடுக்கப்படுகிறது. எப்படியும் வாரத்திற்கு ஐந்து நாட்கள் முட்டை இல்லாத இடத்தில் பால் கொடுக்கப்படுகிறது. எல்லா ஹாஸ்டல் களிலும்தான் கொடுக்கப்பட்டு வருகிறது.

வைகையாற்றின் குறுக்கே தரைப் பாலம்.

*479. வினா. திரு. சு. சோனையா: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

மானாமதுரை தொகுதி, படமாத்தூர்—திருப்பாசேத்தி இணைப்புச் சாலை யில் வைகையாற்றின் குறுக்கே தரைப் பாலம் கட்டும் உத்தேசம் அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை.

நல்லாற்றின் குறுக்கே பாலம்.

*480. வினா. திரு. சு. துரைசாமி: மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் ஊராட்சி ஒன்றியம் நல்லாற்றின் குறுக்கே அங்கேரி பாளையம் செட்டிப்பாளையத்திற்கு இடையில் பாலம் அமைக்கும் செயற் குறிப்பு அரசு பரிசீலனையில் உள்ளதா.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: இல்லை.

திரு சு. துரைசாமி: பேரவைத் தலைவரவர்களே, மேற்படி இடத்தில் இல்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள் ஆனால் விரைவாக பாலம் கட்டுவதற்கான முறையில் தலைமைப் பொறியாளரிடமிருந்து இங்கே